Registered as a News Paper

பக்கங்கள் 04

விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM

Peoples Daily

மக்கள் தினசரி

நாதம் 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆடி 14 29 - 07 - 1992 புதன்கிழமை ஓசை 162

சுண்டுக்குளி [illegible] நூலகம்

## முதல் 12 நாட்களுக்குரிய வினாத்தாள்கள் வந்தன

எதிர்வரும் முதலாம் திகதி ஆரம்பமாகவிருக்கும் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்குரிய முதல்பன்னிரெண்டு நாட்களுக்கான வினாத்தாள்கள் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்துவிட்டன. இம்மாதம் முதலாம் திகதி மேற்படி பரீட்சை யாழ். மாவட்டத்தில் திட்டமிட்டபடி நடைபெற உள்ளது. இதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக யாழ். கல்விப்பணிப் பாளர் திரு. சுந்தரலிங்கம் தெரிவித்துள்ளார். கொழும்பில் இருந்து அனுராதபுரம் எடுத்துவரப்பட்ட இவ்வினாத்தாள்கள் பின்னர் விமானமூலம் பலாலிக்கு எடுத்து வரப்பட்டு பருத்தித்துறை துறைமுகம் ஊடாக யாழ்ப்பாணம் எடுத்துவரப்பட்டது.

# 400 ஜே. வி. பியினருக்கு இந்தியா புகலிடம்

# சிறிலங்கா அரசுக்கு புதிய தலைவலி

## தமிழ்நாட்டில் தலைவர் அமரசிங்கா

(கொழும்பு)

தென்னிலங்கையில் இருந்து தப்பியோடிய 400 ஜே. வி. பி. உறுப்பினருக்கு இந்தியா புகலிடம் அளித்துள்ளதாகவும், இவர்கள் தமிழ் நாட்டிலுள்ள இரு முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும், கடந்தவார 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. மேலும் அச்செய்தியில் ஜே.வி.பியின் தற்போதைய தலைவர் சோமவன்ச அமரசிங்காவும் இந்தியா வந்துள்ளதாகவும், இது சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களில் புதிய தலைவலியை ஏற்படுத்தியுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜே. வி. பி உறுப்பினர்கள் 1989 இல் பின்னடைவுகளைச் சந்தித்தபோது சிறிலங்காவில் இருந்து வெளியேறி தமிழ் நாட்டில் ஒளிந்துகொண்டார்கள். சுமார் 400 ஜே வி.பியினர் தமிழ்நாட்டில் பிரத்தியேகமான இரண்டு முகாம்களில் இப்போது வாழ்ந்துவருவதாகக் கூறப்படுகிறது.

இரு அகதிகள் புனர்வாழ்வு அமைப்புக்கள், ஜே வி.பியினர் தங்கிவாழும் இரு முகாம்களையும் கவனித்து வருகின்றன. இந்த முகாம்களில் ஒன்றைத் தமிழர் விடுதலைக்கூட்டணிப் பிரமுகர் ஒருவர் மேற்பார்வை செய்வதாகக் கொழும்பு புலனாய்வுப் பிரிவுக்குத்தகவல் கிடைத்துள்ளது.

1984—1986 காலப்பகுதியில் ஐந்து தமிழ்க் குழுக்களுக்கு ஆயுதப்பயிற்சியும், ஆயுதமும் பணமும் கொடுக்கப்பட்டது என்றும், அதேபோல புதுடில்லியில் தீவிரப்போக்குடையவர்கள் சிலர் ஜே வி. பிக்கும், பணமும் பயிற்சியும், ஆயுதமும் வழங்கக்கூடும் என்று பாதுகாப்புப் பகுப்பாய்வுப் பிரிவு சந்தேகம் தெரிவித்துள்ளது.

அத்துடன் பொலிஸ், ஆயுதப் படைகள், அத்தியாவசிய சேவைகள், மாணவர் அமைப்புக்கள், தொழிற்சங்கங்கள் மற்றும் அரசியற் குழுக்களில்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## பரீட்சைக் காலத்தில் தாக்குதலை நிறுத்துக

### அதிகாரிகளிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

க. பொ. த. உயர்தரப் பரீட்சை நடைபெறும் காலப் பகுதியில் இராணுவத் தாக்குதல்களை தவிர்த்துக் கொள்ளும்படி யாழ் அரசஅதிபரும், கல்விப்பணிப்பாளரும் அரச உயர்அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டுள்ளனர்.

இவ்விடயம் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று உறுதி அளிக்கப்பட்டதாக தெரியவருகிறது.

(க, பா)

## சுதந்திரக்கட்சி கூட்டத்தில் கோஷ்டி மோதல்

(கொழும்பு)

[illegible]

## அரசாங்க நிறுவனங்களில் வெற்றிடங்கள் நிரப்பப்படும்

யாழ். மாவட்ட வங்கிகளிலும், தபால் திணைக்களத்திலும் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

இதற்கான அனுமதி யாழ். அரசாங்க அதிபருக்கு கிடைத்துள்ளதாக தெரியவருகிறது. கொழும்பில் நடைபெற்ற போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களும் இந்த நியமனத்தின்போது சேர்த்துக் கொள்ளப்படுவர் என்று தெரிவிக்கப்படுகிறது.

## தொண்டமானின் திட்டம் மீள் பரிசீலனை?

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு அமைச்சர் தொண்டமான் சமர்பித்த தீர்வுத்திட்டம் தொடர்பாக மீள் பரிசீலனை ஒன்றை அரசு மேற்கொள்ள இருக்கிறது.

இத் தீர்வுத்திட்டம் குறித்து அரச உயர் அதிகாரிகளும் மற்றும் பொலிஸ்மா அதிபரும் கலந்துகொள்ளும் விசேட மாநாடு ஒன்று நடைபெற உள்ளதாக கொழும்பில் இருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. (க,ச)

## க.பொ.த. பரீட்சை முடிவு 10 ஆம் திகதியே வெளிவரும்

(யாழ்ப்பாணம்)

கல்விப் பொதுத்தராதர உயர்தரத்துக்கான 1991 ஆம் ஆண்டு விசேட பரீட்சையின் பெறுபேறுகள் எதிர்வரும் 10 ஆம் திகதியே வெளிவரும். மேற்படி பரீட்சையின் விடைத்தாள்கள் திருத்தும் வேலையும் பெறுபேறுகளை நிரற்படுத்தும் வேலைகளும் பூர்த்தியடையாததே பெறுபேறுகள் வெளிவராமல் தாமதமடைவதற்கு காரணம் என்று கூறப்படுகிறது. (க,பா,05)

### பருத்தித்துறை–திருமலை

## கப்பற் சேவைக்கு கூட்டுப்படை அனுமதி

பருத்தித்துறைக்கும் திருக்கோணமலைக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவையை நடத்துவதற்கு கூட்டுப்படைகளின் தலைமையகம் அனுமதி வழங்கியிருக்கிறது.

[4 ஆம் பக்கம் பார்க்க]

## வீரச்சாவு

மட்டக்களப்பு தாளங்குடா சந்தியில் வைத்து இயக்க வேலைக்கென சென்றுகொண்டிருந்த விடுதலைப்புலிகள்மீது சிறிலங்கா இராணுவம் பதுங்கியிருந்து தாககியதில் விடுதலைப்புலிகளின் முழுநேர ஆதரவாளர் ஒருவர் வீரச்சாவு அடைந்தார்.

கடந்த ஞாயிறன்று (26.07.92) அதிகாலை 5.40 மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் கணபதிப் பிள்ளை ஜெயசீலன் (கிரான்குளம், மட்டுநகர்) என்பவரே வீரச்சாவு் அடைந்தவராவார்.

இவருக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## விசாரணைகள் துரிதப்படுத்தப்படும்

சிறிலங்கா இராணுவத்தினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ள பொதுமக்கள் தொடர்பானவிசாரணைகளை துரிதப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கிறது.

யாழ்.அரச அதிபருக்கு ஜனாதிபதியின் ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் மேற்படி விசாரணைகள் துரிதப்படுத்தப்படும் என உறுதியளித்துள்ளார். (பா)

## இ.சேவையாளர் பரீட்சை பின்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

கிராமசேவகர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான போட்டிப் பரீட்சை பிற்போடப்பட்டிருக்கிறது.

எதிர்வரும் 26 ஆம் திகதி நடைபெற இருந்த மேற்படி

எடுக்கப்பட்டிருக்கிறது.

இதற்கான அனுமதி யாழ். அரசாங்க அதிபருக்கு கிடைத்

கொள்ளப்படுவர் என்று தெரிவிக்கப்படுகிறது.

லான பயணிகள் கப்பல் சேவையை நடத்துவதற்கு

கிறது.

[4 ஆம் பக்கம் பார்க்க]

## கோஷ்டி மோதல்

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவியான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவை பாராட்டும் கூட்டத்தில் கோஷ்டி மோதல்கள் இடம் பெற்றதாகத் தெரிய வருகின்றது.

திருமதி சந்திரிகா குமாரணதுங்காவின் ஆதரவாளர்களுக்கும், அநுரா ஆதரவாளர்களுக்கும் இடையே நிட்டம்புவ கூட்டத்தில் கோஷ்டி மோதல்கள் இடம்பெற்றதாகவும், சிலர் காயமடைந்திருக்கலாம் எனவும்பொலிசார் கூறியுள்ளனர்.

# புதிய குண்டுவீச்சு விமானங்கள் வாங்குவதற்கு அரசு முயற்சி

## விமானப்படையின் அவசர வேண்டுகோள்

வடக்குக் - கிழக்கில் இராணுவ நடவடிக்கைமேற்கொள்ளும் படையினருக்கு உதவும் பொருட்டு புதிய குண்டு வீச்சு விமானங்களைப் பெற முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதன் மூலம் குண்டுவீச்சு விமானப்படையணி முன்னரை விட இன்னும் கூடுதலாக படையினருக்கு பாதுகாப்பு வழங்க முடியும் என இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

புதிதாக கொள்வனவு செய்யவுள்ள விமானங்கள் தற்போது விமானப் படையினர் குண்டு வீச பயன்படுத்தப்படும் சியா மா செட்டி ரக குண்டு வீச்சு விமானங்களுடன் ஒப்பிடுகையில் இரு மடங்கு குண்டுகளை காவிச் செல்லக் கூடியனவாகும். மேலும்கூடிய தாக்குதல் வேகம் கொண்டனவும் என அவ் வட்டாரங்கள் தெரிவித்தன.

1980-ம் ஆண்டில் இருந்து தொடர்ச்சியாகப் பாவனையில் உள்ள சியா மா செட்டி குண்டு வீச்சு விமானங்களுக்குப் பதிலாக உபயோகிப்பதற்கும், விமானப்படையின் குண்டு வீச்சுத் தாக்குதல் படையணியைப் பலப்படுத்தவும் இவ்வகை விமானங்கள் அத்தியாவசியமாகத் தேவைப் படுகின்றன. மேலும் நீண்ட காலம் பாவனையில் உள்ள சியாமா செட்டி விமானங்கள் பழுதடைந்து வருவதாலும் புதியதை தெரிவு செய்ய வேண்டியுள்ளதாக சொல்லப்படுகிறது.

அண்மையில் விமான உற்பத்தியாளர்கள் குழுவொன்று கொழும்பிற்கு வந்திருந்தது. பலவிமான மாதிரிகள் பரிசீலிக்கப்பட்டன. எதிர் காலத்தில் விமானப் படையின்

[4 ஆம் பக்கம் பார்க்க]

எதிர்வரும் 26 ஆம் திகதி நடைபெற இருந்த மேற்படி பரீட்சையை பரீட்சைத் திணைக்களம் பிற்போட்டிருக்கிறது. கொழும்பு சென்று திரும்பிய யாழ். அரசாங்க அதிபர் திரு.கா.மாணிக்கவாசகர் மேற்படி தகவலைத் தெரிவித்தார்; இப் பரீட்சையை நடத்துவதற்கான புதிய திகதி இதுவரை தீர்மானிக்கப்படவில்லை மிகவிரைவில் இப் பரீட்சைக்கான திகதி பரீட்சைத்திணைக்களத்தால் அறிவிக்கப்படும் என்று தெரியவருகிறது. (க,பா)

## 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

ஆண்டு ஐந்து மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சை எதிவரும் 23 ஆம் திகதி நடைபெறஉள்ளது.

இப் பரீட்சைக்கான சகல ஏற்பாடுகளையும் யாழ். கல்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## சிறில் ரணதுங்காவிற்கு வெளிநாட்டு தூதுவர் பதவி

சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ரணதுங்கா வெளிநாடொன்றில் தூதுவராக நியமிக்கப்பட இருப்பதாக நம்பகமான வட்டாரங்களிலிருந்து தெரிய வருகிறது.

இந்த நியமனம் ஒகஸ்ட் மாத இறுதிக்குள் வழங்கப்பட இருப்பதாக அரசாங்க வட்டாரங்களில் இருந்து தெரிய வருகிறது.

# பெருமாளின் கோட்டைக்குள் பைத்தியக்காரப் பெண்

## பாதுகாவலர்கள் கிலி

(போபால்)

கலைக்கப்பட்ட மாகாண சபையின் முதலமைச்சர் வரதராஜப்பெருமாள் ஒளித்திருந்த வீட்டுக்குள் புகுந்த சித்த சுவாதீனமற்ற பெண் ஒருவர் இந்தியப் பொலிசாரினால் கைதுசெய்யப்பட்டார்.

வரதராஜப்பெருமாள் மத்திய பிரதேச மாநிலத்திலுள்ள போபாலில் பலத்த பாதுகாப்புடன் வீடு ஒன்றில் குடும்பத்துடன் தங்கியிருக்கிறார். அவர்தங்கியிருக்கும்கோட்டை வாசல் வழியாக உள்ளே செல்லமுயன்ற பெண் ஒருவரை பொலிசார் கைதுசெய்தனர்.

வரதராஜப்பெருமாளை கொலை செய்யும் நோக்கத்துடன் இந்தப் பெண் அங்கு சென்றிருக்கலாம் என பொலிசார் அச்சமுறுகின்றனர்.

இதனைத் தொடர்ந்து அவரை வேறிடத்திற்கு மாற்றவேண்டும் அல்லது அவர் தங்கியிருக்கும் வீட்டின் பாதுகாப்பை மத்தியஅரசு பொறுப்பேற்க வேண்டும் என மாநில அரசு கோரிக்கை விடுத்துள்ளது.

## வீரச்சாவு
### 2ஆம் லெப்டினன் சண்முகப்பிரியன்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பழுகாமம் இராணுவமுகாமிற்கும் பெரிய போரைதீவு இராணுவ முகாமிற்கும் இடையில் அமைந்திருந்த இராணுவ காவலரண் மீது விடுதலைப்புலிகள் தாக்குதலொன்றை மேற்கொண்டனர்.

கடந்த வெள்ளியன்று இரவு 11 50 மணியளவில் இத்தாக்குதல் நடத்தப்பட்டது.

இத்துணிகரத் தாக்குதலில் காயமடைந்திருந்த 2ஆம்லெப்டினன்ட் சண்முகப்பிரியன் (அச்சுதன் - மாணிக்கம் நித்தியானந்தன், மல்வத்தை அம்பாறை) என்னும் விடுதலைப் புலிகள் போராளி 25 -07 -92 அன்று அதிகாலை 5.30 மணியளவில் வீரச்சாவு அடைந்தார்.

இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## மட்டு. நான்கு கிராமங்கள் சுற்றிவளைப்பு

# கண்மூடித்தனமான தாக்குதல்கள் ஒரு பொது மகன் பலி; மூவர் காயம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்புமாவட்டத்தில் நான்கு தமிழ்க் கிராமங்களை சுற்றி வளைத்த சிறிலங்கா இராணுவத்தினரும், தேச விரோதிகளும் நடத்திய கண்மூடித்தனமான தாக்குதலில் ஒரு தமிழ்ப் பொதுமகன் கொல்லப்பட்டார். மூவர் காயமடைந்தனர்.

கடந்த சனிக்கிழமை அன்று அதிகாலை 5 மணியளவில் கொக்கட்டிச்சோலை, வவுணதீவு, இராணுவ முகாம்களைச் சேர்ந்த இராணுவத்தினரும், ரெலோ தேசவிரோதிகளும் தாண்டியடி, கொத்தியாவளை, காஞ்சிரங்குடா, வாழைச்சேனை ஆகிய பகுதிகளைச் சுற்றி வளைத்து கண்மூடித்தனமான தாக்குதல் நடத்தினர்.

இதேவேளை அப்பகுதிகளை நோக்கி சிறிலங்கா விமானப் படைக்குச் சொந்தமான உலங்குவானூர்தி ஒன்றும் 50 கலிபர் தாக்குதலை நடத்தியது.

இத்தாக்குதல்களால் முனைக்காட்டைச் சேர்ந்த வல்லிபுரம் பத்மன் என்பவர் கொல்லப்பட்டார். இதேயிடத்தைச் சேர்ந்தவர்களான பொன்னம்பலம் ஆனந்தன் (வயது 28) தில்லையம்பலம் ரவி (வயது 27), பாலிப்போடி (வயது 25) ஆகியோர் காயமடைந்தனர்.

## தமிழரை திருப்பி அனுப்ப இந்தி.—ஐ. நா. உடன்படிக்கை

இந்தியாவிலிருந்து இலங்கைத் தமிழர் திருப்பி அனுப்பப் படுவது சம்பந்தமாக இந்திய அரசும், ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயமும், உடன்படிக்கை ஒன்றை செய்துகொள்ள உள்ளன.

அகதிகள் தன்னிச்சையாக-சுயவிருப்புடன் திரும்பிச் செல்ல விரும்புகின்றார்களா என்பதைக் கண்டறிய ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயம் இந்தியாவில் திடீர் சோதனை நடத்தவும், இந்திய அரசு இணங்கிக் கொண்டுள்ளது.

இந்த வாரத்தில் இந்திய அரசுக்கும், யு. என். எச். சி. ஆருக்கும் இடையே இவ்வுடன்படிக்கை ஜெனிவாவில் கைச்சாத்தாகும் என்று தெரிகின்றது.

**தவறுக்கு வருந்துகிறோம்**

நேற்றைய ஈழநாதம் தலைப்புச் செய்தியில், 4 ஆம் பக்கத்தில் கறுப்புப் பூனைகள் என்று வரவேண்டிய இடத்தில் தவறுதலாக கரும்புலிகள் என இடம் பெற்றுவிட்டது. இத் தவறுக்கு வருந்துகின்றோம்.

**நீர் இன்றேல் சீர் இல்லை**
**குளம்இன்றேல்வளம்இல்லை**

# விண்ணக வாழ்வின் 31ஆம் நாளில் எங்கள் அலைமோதும் நினைவுகள்

மண்ணில் விதையாக

13 - 01 - 1966



மண்ணில் முளையாக

29 - 06 - 1992

## மேஜர் அழகன்

நாங்கள் எல்லோரும் ஒன்றாயமர்ந்து
சிற்றுண்டி தேநீர் அருந்தி மகிழ்ந்த
அந்தக் கணங்கள் இனியும் வருமா...
ஏக்கங்களோடு காத்திருக்கின்றோம்
எங்கள் அழகன் அண்ணா...

"நண்பர்கள்"
ஸ்பெஷல் எஞ்ஜினியேர்ஸ்
36, ஸ்ரான்லி விதி, யாழ்ப்பாணம்.

(சி-4787)

## திலீபன் கேடயத்திற்கான தடகள விளையாட்டு போட்டி

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடத்தப்படும் மாவீரர் தடகள விழா தியாகி திலீபன் நினைவுக்கேடயத்திற்கானது) செப்டெம்பர் 3, 4, 5, 6 ஆகிய தினங்களில் நடைபெறவுள்ளது. யாழ். மாவட்ட மட்டத்தில் மாத்திரம் நடைபெற இருக்கும் இப்போட்டிக்கான விண்ணப்ப முடிவுத் திகதி ஆகஸ்ட் 10 ஆம் திகதி என அறிவிக்கப்படுகின்றது.

போட்டிக்கான விண்ணப்பப் பத்திரங்களை அவ்வப் பகுதி விளையாட்டுப் பொறுப்பாளர்களிடமும், வட்டச் செயலகங்களிலும் ஆகஸ்ட் 1 ஆம் திகதி தொடக்கம் பெற்றுக் கொள்ளலாம். தடகள போட்டிக்கு தனியான விண்ணப்பமும், சைக்கிள் ஓட்டம, மரதன் ஓட்டம், வேகநடை, போட்டிக்கு தனியான விண்ணப்பமும் கொடுக்கவேண்டும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

### ஆங்கிலதின விழா

(பருத்தித்துறை)

பருத்தித்துறை வட-இந்து மகளிர் கல்லூரி ஆங்கிலதின விழா புலோலி கொத்தணி அதிபர் திருமதி வோ. குமாரசாமி தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவிலே வடமராட்சிக் கல்விக்கோட்ட ஆங்கில கல்வி ஆலோசகர் திருமதி ஜெயபூபதி குலசிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். ஆங்கிலதின விழாவிலே வெற்றியீட்டிய மாணவிகளுக்கான சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. (25)

## நினைவு கூருகின்றோம்..

### 1992 - 07 - 29

1985 ஆம் ஆண்டு இதே தினத்தில் வவுனியா பண்டாரிக்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய-

**லேடி பாலா / பாலன்** (பொன்னையா லலித்குமார் - பண்டாரிக்குளம், வவுனியா)

1987 ஆம் ஆண்டு வீரச்சாவெய்திய -

★ **சுமந்த** (பத்தக்குட்டி நாகேந்திரம் - பூநகர், மூதூர் திருக்கோணமலை)

★ **வயிரவன் காளிராசா** (மாவடிச்சேனை, வெருகல், திருக்கோணமலை)

1988 ஆம் ஆண்டு மன்னார் / அடம்பன் - ஆட்காட்டி வெளிப் பகுதியில் இந்தியப் படையினருடனான நேரடி மோதலில் வீரச்சாவெய்திய -

**கப்டன் எட்வின்** [சூசைப்பிள்ளை அன்ரன் ஜோய்- பள்ளிமுனை, மன்னார்]

1989 ஆம் ஆண்டு முல்லைத்தீவு - 3-ம் கட்டைப் பகுதியில் அமைந்திருந்த இந்தியப் படையினரின் முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது வீரச்சாவெய்திய -

**கப்டன் யேசுதாஸ்** [வீரகத்தி விக்னேஸ்வரன் - கற்குளம், நெடுங்கேணி, மணலாறு]

**லெப். அன்சார்** (சீவரத்தினம் சிவரூபன் - பரந்தன், கிளிநொச்சி]

மட்டக்களப்பு - படுவான் கரைப் பகுதியில் தேசவிரோத சக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட 3 தமிழர்கள்,

திருக்கோணமலை / மூதூர், மல்லிகைத்தீவுப் பகுதியில் சிறிலங்கா ஊர்காவல் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 14 தமிழர்கள்.

1990 ஆம் ஆண்டு யாழ். கோட்டைப் பகுதியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட விமானத் தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**லெப். சிறி** [கிருஸ்ணமூர்த்தி ஹரிபத்மநாதன் - 48, புதுவீதி, அத்தியடி, யாழ்ப்பாணம்]

**அகஸ்ரின்** [அ. செல்வராசா - யாழ்ப்பாணம்]

கைதடி மேற்கில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட உலங்குவானூர்தித் தாக்குதலில் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

1991 ஆம் ஆண்டு ஆனையிறவில் மேற்கொள்ளப்பட்ட ஆ. க. வெ. நடவடிக்கையின்போது தடைமுகாம் மீது 2 ஆவது தடவையாக மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது வீரச்சாவெய்திய -

**கப்டன் வண்டு** [சுப்பிரமணியம் யோகேஸ்வரன் -

(சி-4787)

36, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.


## வரி விளம்பரம்

**தையல் இயந்திரங்கள்**

தையல் இயந்திரங்களை வாங்கவும், விற்கவும், பழுதடைந்த தையல் இயந்திரங்களை உங்கள் வீட்டிலேயே வைத்துத் திருத்தவும், உதிரிப் பாகங்களைப் பெற்றுக் கொள்ளவும், தையல் இயந்திர விற்பனை நிலையம், கண்டி வீதி சாவகச்சேரி. [2876]

**விற்பனைக்கு**

கிணற்றுப்பங்குடன் 8 பரப்புத் தோட்டக்காணி அல்வாய் தெற்கில் கிராம சபைக்கு அருகாமையில் உண்டு. தொடர்பு திருமதி ப. சுப்பிரமணியம், அதிபர் அல்வாய் தெற்குஅல்வாய் [4773]

நல்ல நிலையிலுள்ள வெற்றுச் சீமெந்துப் பைக்கற் எம்மிடம் மொத்தமாக விற்பனைக்குண்டு. கொள்வனவு செய்ய விரும்புவோர் முகாமையாளர், மருந்து, பால்மா வகைகள் (தனியார்) வரையுள்ளது. 484, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அலுவலக நாட்களில் தொடர்பு கொள்ளவும். (2913)

**உங்கள் கடிகாரங்கள் றேடியோக்கள்**

நல்ல நிலையிலுள்ள மணிக்கூடுகள் றேடியோக்கள் வாங்கப்படும், விற்கப்படும் உதிரிப் பாகங்களுக்கான மணிக்கூடுகளும் றேடியோக்களும் வாங்கப்படும் மணிக்கூடுகள், றேடியோக்கள் உத்தரவாதத்துடன் திருத்திக்கொடுக்கப்படும் டில்கா வாச் வேக்ஸ், 284 ஸ்ரான்லி வீதி (வானவில் கூல்பார் அருகாமை) யாழ்ப்பாணம். (2879)


## 41-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக்கிரியைகளும்



தோற்றம் 01 | 05 | 1928

மறைவு 20 | 06 | 1992

### திரு. நாகலிங்கம் சேனாதிராசா

(ஓய்வுபெற்ற பொலிஸ் இன்ஸ்பெக்டர்)

இல்லறமாம் நல்லறத்தை இனிதே நடாத்தி
எம் இதயங்களில் என்றும் நிலைகொண்ட
எங்கள் அன்புத் தெய்வமே
எமது இதய தாமரையை
தங்கள் திருவடிகளில் அஞ்சலியாக வைத்து
இறைஞ்சுகின்றோம்.
நெஞ்சிருக்கும் வரை நினைவிருக்கும்.

அமரத்துவம் அடைந்த முன்னாள் பொலிஸ் இன்ஸ்பெக்டர் நாகலிங்கம் சேனாதிராசா அவர்களின் அந்தியேட்டி வீட்டுக்கிரியைகள் 30 - 7 - 92 வியாழக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும்.

அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் குடும்ப சகிதம் வருகை தந்து வைபவத்தில் கலந்து, ஆன்ம சாந்திக்காகப் பிரார்த்தித்து மதிய போசனத்தில் பங்கு கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

சிறுவிளான்,
இளவாலை.

இங்ஙனம்
திருமதி மகேஸ்வரி சேனாதிராசா
பிள்ளைகள், மருமகன்,
பேரப்பிள்ளைகள்.

(சி-4784)

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பிதழும்



### திருவாளர் சின்னத்தம்பி வேலுப்பிள்ளை

(நாகர் கோயில்)

தோற்றம் 11-05-1907

மறைவு 30-06-1992

மண்காக்கும் வீரமறவர் நின்றுபோர் புரிய
தன் மானம் காக்கும் தமிழர் பரம்பரையில் தோன்றி
அன்னியனுக் கஞ்சி அகதியாய் செல்வதா என்றெண்ணி
குண்டேந்தி சொந்தமண்ணில் இன்னுயிரை நீத்தனையோ

அன்னாரின் அந்தியேட்டிக்கிரியை நாள் 30-07-92 வியாழக்கிழமை நடைபெற இருப்பதால் உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இடம்: பளை இத்தாவில் சந்தியினூடாக
அம்பளவளையில் நடைபெறும்.

கோவில்வயல்,
இயக்கச்சி. (2912)

மக்கள், மருமக்கள்,
சகோதரர்கள், பேரப்பிள்ளைகள்,

குதலின்போது வீரச்சாவெய்திய -

**கப்டன் வண்டு** [சுப்பிரமணியம் யோகேஸ்வரன் - உடுத்துறை, தாளையடி, யாழ்.]

**லெப். சதீஸ்** [க. புஸ்பராஜன் - ஆலங்கேணி, கிண்ணியா, திருக்கோணமலை]

**லெப். கர்ணன்** [தவரட்ணம் வெஸ்லி தவேந்திரன் - 'சத்தியபுரி', 1-ம் கட்டை, தம்பசிட்டி வீதி, பருத்தித்துறை, யாழ்.]

**லெப். தயாளன்** [சிவகுரு மோகனசுந்தரம் - அலைக்கல்லுபோட்டகுளம், ஓமந்தை, வவுனியா]

**லெப். றூபன்** [கணபதிப்பிள்ளை கேதீஸ்வரன் - ஐயனார் தில் தம்பலகமம், திருக்கோணமலை]

**2-ம் லெப். றெஜினா** [ஜெயசிங்கம் பேணாட் மதியழகன் - நுணாவில் கிழக்கு, கைதடி, சாவகச்சேரி, யாழ்.]

**2-ம் லெப். செனித்** [குமாரசாமி திருவேரகன் - ஏழாலை வடக்கு, யாழ்.]

**லிங்கேஸ்** (வன்னியசிங்கிஜவன் ஜெயராஜ் - 847, உப்புவெளி, திருக்கோணமலை)

**யோகன்** (சின்னத்துரை கண்ணன் - சுழிபுரம் கிழக்கு யாழ்.)

**குருபரன்** (ஆறுமுகம் பாலையா - எட்டியாந்தோட்டை மலையகம்)

**அலிஸ்ரன்** (தியாகராசா கிருஸ்ணபாலன் - 4-ம் கிராமம், மத்திய முகாம், அம்பாறை)

**நளா** (லலிதாதேவி நடராசா - புங்குடுதீவு மேற்கு, தீவகம், யாழ்.)

**கஜந்தா** (இந்திராணி மணியம் - இரணைமடு, கிளிநொச்சி)

இதே நடவடிக்கையின்போது புல்லாவெளியிலிருந்து ஆனையிறவை நோக்கி முன்னேறிய சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**ரூபிகா** (வினோதா வேலாயுதபிள்ளை - குழவி சுட்டான், நெடுங்கேணி, மணலாறு)

**செந்தூரன்** (கந்தையா நாகேந்திரன் - மத்திய முகாம், அம்பாறை)

**2-ம் லெப். காந்தரூபன்** (பிரான்சிஸ் நெல்சன் - 310, என். சி. வீதி, திருக்கோணமலை)

**கூலோஜன்** (சிற்சபை நிரஞ்சன் - நாயன்மார் திடல், தம்பலகமம், திருக்கோணமலை)

**விநாயகன்** (சித்திரவேல் மோகன் - கோயில் போரதீவு, மட்டக்களப்பு)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

★ மேற்குறிப்பிடப்பட்டுள்ள மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவர்களாவர்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

[சி/4781]

### சிந்தனைக்கு

அறிந்தவனுக்கு அறிவுரை கூறத் தேவையில்லை
அறியாதவனுக்கு அறிவுரை கூறிப் பயனில்லை.
— ஸொனெகா


# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 29- 07- 1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05


## யுத்தம் தீர்வாகாது

"தற்போதைய யுத்தம் தொடருமானால் இந் நூற்றாண்டின் முடிவில் நாடு ஒரு நடமாடும் ஆஸ்பத்திரியாக மாறும். இறுதியில் ஈழம் வழங்கப்பட்டே ஆக வேணடி வரும்." இவ்வாறு முன்னாள் விமானப் படைத் தளபதி ஹரிகுணதிலக்காவை மேற்கோள் காட்டி "சண்டே ஐலண்ட்" வார இதழில் 'ரொஹான் குணசேகரா' எழுதியுள்ள கட்டுரை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

இக்கூற்றானது சிறிலங்கா அரசாங்கத்தை மிரட்டுவதற்காக மிகைப்படுத்திக் கூறப்பட்ட தொன்றல்ல. இன்று நடந்து கொண்டிருக்கும் போரின் வளர்ச்சி நிலை அங்கே தான் கொண்டு போய்விடும். இது சரியான கணிப்பீடேயாகும்.

சிங்களவரைப் பொறுத்து யுத்தம் இன்று சலிப்பூட்டுவதாகவும், நம்பிக்கையற்றதாகவும் மாறத் தொடங்கி விட்டது. ஆனால் சிங்கள ஆட்சியாளர்கள் மட்டும் யுத்தத்தை நிறுத்துவதாக இல்லை. சிங்கள ஆட்சியாளர்கள் இன்று தமது அதிகாரத்தைத் தொடர்ந்தும் பாதுகாத்துக் கொள்ள யுத்தம் அவசியமாகியுள்ளது.

சிறிலங்கா இராணுவத்தினர் இன்று யுத்தத்தில் வெற்றி பெறுவோம் என்ற மனநிலையில் இல்லை. விடுதலைப் புலிகளின் மனோதிடதிற்கு முன்னால் இராணுவத்தினால் தாக்குப் பிடிக்க முடியாது உள்ளது. சிங்கள பிரபல அரசியல் விமர்சகரான மேர்வின் டீ சில்வா குறிப்பிட்டது போன்று "இராணுவத்தினருக்கு வழங்கப்படும் எந்த ஊக்கமும் சயனைட் குப்பியை அணியும் விடுதலைப் புலிகளின் மனோவலிமைக்கு அவர்களை இட்டுவர முடியாது." இதன் பிரதிபலிப்பே இன்று சிங்கள இராணுவத்தில் இருந்து பெரும் அளவில் ஓடுவதும் ராணுவத்தில்ஆட்கள்சேர்ந்துகொள்ளமுன்வராமையுமாகும். அதாவது பௌத்த பேரினவாதம்ஊட்டிய வெறியைக் கலைத்து விடுவதாக இராணுவத்தினருக்கு ஏற்பட்ட இழப்பும், அதிகரித்த அங்கவீனர்களின் தொகையும் மாறிவருகின்றது.

இதேவேளை, சிறிலங்காவில் அதிகரித்துவரும் இராணுவச் செலவீடானது வருமானத்தில் பெரும் பகுதியை ஏப்பமிடுவதாக உள்ளது யுத்தச் செல

# தமிழரைக் கைவிட்ட "தமிழருக்கான" ஒப்பந்தம் - 1987

ஒப்பந்தம் தமிழருக்குப் புதிதல்ல; எப்போதும் ஒப்பந்தங்களினால்துரோகம் இழைக்கப்பட்டவர்கள்.

1920 ஆம் ஆண்டு ஜேம்ஸ் பீரிஸிற்கும் சேர். பொன் அருணாசலத்திற்கும் இடையில் ஓர் ஒப்பந்தம். ஆனால் அடுத்த ஆண்டு ஜேம்ஸ் பீரிஸால் இது கைவிடபபட்டது.

1925ஆம் ஆண்டு 'மகேந்திர' ஒப்பந்தம். தமிழர் மகாஜன சபைக்கும, இலங்கைத் தேசிய காங்கிரஸிற்கும் இடையில் இந்த ஒப்பந்தம். தமிழர் மகாஜன சபையின் சார்பில் வைத்திலிங்கம் துரைசுவாமி தலைமையில் ஒன்பது பேரும், இலங்கைத் தேசிய காங்கிரஸின் சார்பில் சி. ஈ. கொரிய தலைமையில் ஒன்பது பேரும் இவ்வொப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர் இதுவும் இலங்கைத் தேசியக் காங்கிரஸால் கைவிடப்பட்டது.

1957 ஆம் ஆண்டு எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவிற்கும் எஸ். ஜே. வி செல்வநாயகத்திற்கும் இடையில் ஓர் ஒப்பந்தம். இதுவும் பண்டாரநாயக்காவால் கைவிடப்பட்டது.

1965ஆம் ஆண்டு டட்லி சேனநாயக்காவிற்கும் எஸ். ஜே வி. செல்வநாயகத்திற்கும் இடையில் ஓர் ஒப்பந்தம். இதுவும் டட்லியால் கைவிடப்பட்டது.

1980ஆம் ஆண்டு ஜே. ஆர் ஜெயவர்த்தனாவுக்கும் அ. அமிர்தலிங்கத்திற்கும் இடையில் மாவட்ட அபிவிருத்தி சபை சம்பந்தமாக ஓர் எழுதப்படாத உடன்பாடு அதனையும் ஜே. ஆர். கைவிட்டார்.

இவ்வாறாகச் சிங்களத் தமிழ்த் தலைவர்களுக்கிடையில் நடைபெற்ற ஒப்பந்தங்கள் யாவும் சிங்களத் தலைவர்களால் தொடர்ந்து கைவிடப்பட்டுத் தமிழர் துரோகம் இழைக்கப்பட்டு வந்த வரலாற்றுப் போக்கில் தமிழரின் பெயரால் தமிழரைக் கைவிட்டு இலங்கை இந்திய அரசுகள் இரண்டும் ஜே ஆர். ராஜீவ் ஒப்பந்தம் ஒன்றை 1987ஆம் ஆண்டு ஜூலை 29 ஆம் திகதி கைச்சாத்திட்டனர்.

தமிழர் பிரச்சினையில் தமிழர் கைச்சாத்திடாத இந்த ஒப்பந்தத்தில் தமிழர் திருப்தி அடையவில்லை. ஒப்பந்தத்தின் குறைகள் தமிழர் தரப்பில் இருந்து சுட்டிக் காட்டப்பட்டன.

ஒப்பந்தத்தில் இருப்பதை விடவும் அதிகமான விடயங்களை தான் "தரப்போவதாக" ராஜீவுக்கு ஜே. ஆர். உறுதியளித்ததாகவும், அந்த வகையில் இது ஒரு கனவான்கள் ஒப்பந்தம் என ராஜீவ் தனக்கு விளக்கியதாகவும், இந்து ராம் பிற்காலத்தில் கூறினார் ஆனால் ஜே. ஆர். கனவான் ஒப்பந்தத்தை மீறிவிட்டார் என ராம் கூறியுள்ளார்.

ஒப்பந்தங்களால் ஏமாந்த வரலாறு தமிழருக்கு நிறையவே உண்டு ஆதலால் புலிகள் 1987 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தில்ஏமாறத் தயாராய் இருக்கவில்லை ஆனால் "கனவான்" ஒப்பந்தத்தின் பெயரால் ராஜீவை ஜே. ஆர். ஏமாற்றினார். ராஜீவின் ஏமாற்றத்திற்குத் தமிழர் பலியாக வேண்டி இருந்தது.

தமிழரின் பிரச்சினை மேலோட்டமாய் பார்க்கப் படக் கூடியதோ அன்றிச் சாகச விளையாட்டுக்களினால் தீர்க்கக் கூடியதோ, மந்திரத்தால் மாங்காய் விழுத்தக் கூடியதோ அல்ல,

ராஜீவ் இதனை மேலோட்டமாகவும் சாகசமாகவும் பார்த்தார். இதற்குரிய வரலாற்று வளர்ச்சிப் போக்கைப் பற்றியும், இதன் எதிர்கால ஆபத்துப் பற்றியும் எஸ். டபிள்யூ.

### சாரணன்

ஆர். டி. பண்டாரநாயக்காவிற்கு என். எம். பெரேரா விடுத்த எச்சரிக்கையை தெரிந்து கொண்டால் இதன் ஆழத்தைப் புரிந்து கொள்ளலாம்.

பண்டாரநாயக்காவின் தனிச் சிங்களக் கொள்கைக்கு எதிராக 1956 ஆம் ஆண்டு என். எம் பெரேரா பின்வருமாறு பண்டாரநாயக்காவை எச்சரித்தார் அதன் சாரம் வருமாறு "உமது தனிச் சிங்களக்கொள்கையின் விளைவை 25 ஆண்டுகளின் பின்பு இந்த நாடு அனுபவிக்கும். ஆயுதம் தாங்கிப் போராடும் தமிழ் இளைஞர்கள் தோன்றுவார்கள்; அப்போது இந்த அழகிய தீவு இரத்தமயமாகும்" என்றும்,

"எதிர்காலத்தில் தமிழர் உனக்குச் சிலை எடுப்பார்கள் ஏனெனில் நீதான் நாடுபிரிய அத்திவாரம் இட்டனி என்பதற்காக" என்றும் கூறினார்.

"மொழி ஒன்றெனில் நாடு இரண்டு, மொழி இரண்டெனில் நாடு ஒன்று" என கொல்வின் ஆர். டி. சில்வா கூறியதையும் இங்கு கவனிப்போமானால் இவ்வாறு சிங்களத் தலைவர்களே கூறினார்கள் என்றால் இது ஒரு தவிர்க்க முடியாத வரலாற்று வளர்ச்சி என்பதை ஒரு குழந்தை கூட இலகுவாகப் புரிந்து கொள்ள முடியும் இதன் வரலாற்று வளர்ச்சியையும், சிங்களத் தலைவர்களின் சூசக நாடகங்களையும் சற்றும கருத்தில் எடுக்காது ராஜீவும்,டிக்சிற்றும் சேர்ந்து ஆடிய நாடகம் தமிழரை மேலும் துயரத்துள் ஆழ்த்தவே உதவியுள்ளது.

### ஒப்பந்தங்கள் பலவகைப்படும்

(1) இரு சமபலச் சக்திகளுக்கு இடையேயான ஒப்பந்தம்.
(2) வெற்றி பெற்றவனுக்கும் தோல்வி அடைந்தவனுக்கும் இடையிலான ஒப்பந்தம்.
(3) பலம், பலவீனம் என்பவற்றிற்கு அப்பால் பரஸ்பர நலன்களுக்கு ஆன ஒப்பந்தம்.
(4) பலவான் தனது இடைக்கால நெருக்கடிகளிலிருந்து தன்னைச் சுதாகரிப்பதற்காகப் பலவீனனுடன் செய்யும் ஒப்பந்தம்.
(5)பலவானான சிங்கத்திற்கும் பலவீனமான நரிக்கும இடையிலான ஒப்பந்தம் எனப் பல வகைகளாகப் பகுத்து நோக்கலாம்.

இலங்கை - இந்திய ஒப்பந்தம் பலவானானசிங்கத்திற்கும் பலவீனமான நரிக்கும் இடையில் ஏற்பட்டஒப்பந்தமாகும். இறுதியில் சிங்கத்தை நரி பொறிக்குள் வீழ்த்தியது

இதனை ஜே. ஆரின் வார்த்தையில் விளக்குவதானால் "முன்பு புலிகளும் நாங்களும் விளையாடும் போது இந்தியா மத்தியஸ்தராய் நின்றது. இப்போது புலிகளும் இந்தியாவும் விளையாடுகின்றனர். நான்மத்தியஸ்தராய்நிற்கிறேன்" எனும் அர்த்தத்தில் மிடுக்குடன் கூறினார். உண்மையில் இந்தியாவின் நலன்களுக்கான பூச்சிமுட்டாயை ராஜீவின்கண்ணிற் காட்டி ராஜீவை பொறிக்குள்அகப்படுத்தினார் ஜே. ஆர். பொறியுள் அகப்பட்ட இந்தியா தமிழரைக் குதறியது.

இத்தனைக்குப் பின்பும் இலங்கை - இந்திய ஒப்பந்தம் ஒரு "ஞானச் சிந்தனை" என இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் ஜா அண்மையிற் கூறியிருப்பதன் அர்த்தமென்ன?

தொடர்ந்தும் தமிழருக்கு துரோகம் இழைக்கப்படக் கூடாது. எல்லோரினதும் அபிலாசைகளுக்கும் பலியாகித் தெருப்பாவை போல எல்லோரினதும் குட்டுக்களுக்கு இலக்காகித் துயருறும் தமிழர் தம் மண்ணில் இனியாவது நிம்மதியாக வாழ வழியேற்பட வேண்டும். ஆதலினால் நீதி நியாயத்தின் பெயராலும், ஜனநாயகத்தின் பெயராலும், மனிதாபிமானத்தின் பெயராலும் தமிழரின் தலையில் சம்பந்தப்பட்டோர் குட்டாது விடுவார்களா? என்பதே இன்று எழும் பிரதான கேள்வி.

# பாரசீக வளைகுடாப் பகுதியில் ராணுவ நடமாட்டம் அதிகரிக்கும்

## - அமெரிக்கா அறிவிப்பு

[வாஷிங்டன்]

பாரசீக வளைகுடாப் பகுதியில் தனது இராணுவ நடமாட்டத்தை அதிகரிக்கப் போவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

பாரசீகவளைகுடாப் போர் நிறுத்தத்தின் போது ஈராக்குடன் எட்டப்பட்ட தீர்மானங்கள் எந்த விதத்திலும் மீறப்படுவதை வருங்காலத்தில் அனுமதிக்க முடியாது என்று ஜோர்ஜ் புஷ் அறிவித்ததையடுத்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க விமானத் தாங்கிக் கப்பலான "ஜான் கெனடி" ஈராக் மீது தாக்கு

அயோத்தி விவகாரத்தில்

# நரசிம்மராவ் - அர்ஜுன்சிங் கருத்து முரண்பாடு

# பேச்சுக்கான சுமூகசூழ்நிலை தற்போது கிடைத்துள்ளது

## பி. வி. நரசிம்மராவ்

(டில்லி)

அயோத்தியாவில் கட்டுமாணப் பணிகள் நிறுத்தப் பட்டு விட்டதால் பேச்சுவார்த்தைகள் தொடங்கக் கூடிய சுமூகமான சூழல் இப்போது இருப்பதாக பிரதமர் பி. வி. நரசிம்மராவ் கூறியுள்ளார். நேற்று முன் தினம் ராஜ்ய சபாவில் பேசிய பிரதமர் சர்ச்சைக்கு உட்பட்ட இடத்தில் கட்டுமாணப் பணி நிறுத்தப் பட்டதும் பதற்றம் தணிந்து விட்டதாகக் குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் பேசுகையில் அயோத்தி விவகாரத்தில் எந்தச் சமயத் தலைவர்களுக்கும் தாம் எந்த வாக்குறுதியையும் அளிக்காத போதும், பல்வேறு நீதிமன்றங்களிலும் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் எல்லா வழக்குகளையும் ஒருங்கிணைத்து ஒரே ஒரு நீதிமன்றம் அளிக்கும் தீர்ப்பை எல்லாக் குழுக்களும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று சமயத் தலைவர்களிடம் தாம் தெளிவாக எடுத்துக் கூறியிருப்பதாகத் தெரிவித்தார்.

ருக்கு ஏற்பட்ட இழப்பும், அதனால் அவலங்களின் தொகையும் மாறிவருகின்றது.

இதேவேளை, சிறிலங்காவில் அதிகரித்துவரும் இராணுவச் செலவீடானது வருமானத்தில் பெரும் பகுதியை ஏப்பமிடுவதாக உள்ளது. யுத்தச் செலவீடும் அதனோடு தொடர்ந்து அதிகரித்து வரும் அகதிகளுக்கான செலவீடும் சிறிலங்கா அரசாங்கத்திற்குப் பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. இந்நிலையில் பெரும்தொகை அந்நிய நாட்டுக் கடனை சிறிலங்கா நாடி நிற்கவேண்டியுள்ளது. கடன் வழங்குபவர்கள் விதிக்கும் நிபந்தனைகள் அரசையே ஆட்டம் காணச் செய்பவையாகவுள்ளன. அதாவது நிபந்தனைகள், வேலையில்லாத் திண்டாட்டத்திற்கும், பண வீக்கத்திற்கும் வழி வகுப்பதோடு, அதன்மூலம் விலை வாசி ஏற்றத்திற்கும் வழிவகுப்பன வாகவுமுள்ளன இதனால் அரசு சிங்கள மக்களின் அதிருப்தியை நேரடியாகத் தேட வேண்டிய நிலைதான் உருவாகும்.

இவையாவற்றிற்கும் மேலாக பெரும் உயிரிழப்புடனும் பொருள் இழப்புடனும் மேற்கொள்ளப்படும் இந்த யுத்தமானது வெற்றியைத் தேடித்தரும் என்பதும் இல்லை. திரு. ஹரி குணத்திலகா இந்த யுத்தத்தை வருட இறுதிக்குள் முடிவுககுக் கொண்டு வந்துவிட முடியும் என நான் நம்பவில்லை. இந்தக் கணிப்பில் நான் பிழையானால் அதை அவர்கள் (அரசாங்கம்) நிருபிக்கட்டும்' எனச் சவால் விட்டுள்ளார்.

இதனை வலியுறுத்துவதைப் போல் உள்ளது கிழக்கின் நிலைமை. இரண்டு வருடங்களுக்கு முன்னர் புலிகளை வெற்றி கொண்டு விட்டதாக இராணுவம் அறிவித்திருந்த போதும், இன்னமும் கிழக்கில், இராணுவத்திற்கு ஏற்பட்டு வரும் இழப்புககளையும், சிவில் நிர்வாகத்திற்கான தடைகளையும் அவர்களால் நீக்க முடிய வில்லை. வடக்கிலோ இராணுவம் தனது கட்டுப்பாட்டில் வைத்துள்ள பகுதியில் மக்கள் இல்லை இங்கு சிவில்நிர்வாகம் எனப் பேசுவதுகேலிக்குரியதாகும்

இந்நிலையில் தொடரும் யுத்தம் அரசிற்கு நன்மை அளிக்கப் போவதில்லை. இழப்புக்களைத் தவிர்ப்பதற்கும் இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கும் இன்றும் காலம் கடந்துவிடவில்லை அரசியல் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு எட்ட முடியாது என்பது புதியதொரு போதனையல்ல. ஆனால் சிறிலங்காவிற்கு அது புரியாதவரை திருப்பத் திரும்ப கூற வேணடியுள்ளது.

அயோத்தி விவகாரத்தில்

## நரசிம்மராவ் - அர்ஜூன்சிங் கருத்து முரண்பாடு

(டில்லி)

பிரதமர் நரசிம்மராவுக்கும் மனிதவளஅமைச்சர் அர்ஜூன் சிங்கிற்கும் இடையே அயோத்தியாவில் ராமர் கோயில் கட்டும் விவகாரம் குறித்து அபிப்பிராய பேதம் ஏற்பட்டுள்ளது.

பிரதமர் நரசிம்மராவ் மிகவும் சிறப்பாகவும் உறுதியாகவும் அயோத்தியாப் பிரச்சினையைக்கையாண்டார்என்று மனித வள அமைச்சர் அர்ஜூன்சிங் பாராளுமன்றத்தில் குறிப்பிட்டார் ஆனால்தொடர்ந்து பேசுகையில், காங்கிரஸ் கட்சியின் பாரம்பரியமே எதிர் வழக்காடுதல்தான் இணைந்து போதல் அல்ல என்றும் குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தில் பிரதமர் நரசிமமராவ் பேசுவதற்குச் சற்று முன்னதாக அமைச்சர் அர்ஜூனசிங், தானும் பேச வேண்டும் என்ற வேண்டுகோளுடன் பேச ஆரம்பித்து இவ்வாறு பேசினார்.

காங்கிரஸ் கட்சி தனது இந்தியக் கனவை நனவாக்கப் பாடுபடுகிறதா? அல்லது பாரதீய ஜனதாக் கட்சியின்கனவை நனவாக்கப் பாடுபடுகின்றதா? என்று பாராளுமன்றத்தில் காங்கிரஸ் உறுப்பினர்களை நோககிக் கேள்வி தொடுத்தார்.

இதற்குப் பதிலளித்துப் பேசிய பிரதமர், உறுதிக்கும் அசட்டுத்தனத்துக்கும் பாரிய வித்தியாசமுண்டு என்று நாசூக்காகப் பதிலளித்தார்.

தொடர்ந்தாற் போல் பத்திரிகையாளர்களிடம் பேசிய அர்ஜூன்சிங், தான் பிரதமரைப் பலவீனப் படுத்தும் முகமாகவோ அல்லது சவால் விடுதோ பேசவில்லை என்றும் கூறியுள்ளார்.

பிரதமர் நரசிம்மராவ், திருப்பதி மாநாட்டில் காரியக் கமிட்டி - தேர்தல் பெயர் பட்டியலில் இருந்து அர்ஜூன் சிங் பெயரை நீக்கி, அவரை நியமன உறுப்பினர் ஆக்கியதிலிருந்து பிரதமருக்கும், அமைச்சர் அர்ஜூன்சிங்கிற்கும் இடையில் அபிப்பிராய பேதம் நிலவி வருவது குறிப்பிடத்தக்கது.

யடுத்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க விமானத் தாங்கிக் கப்பலான ''ஜான் கெனடி'' ஈராக் மீது தாக்குதல் நடத்தக் கூடிய தொலைவில் உள்ள பகுதிக்கு அனுப்பப்பட்டுள்ளது மற்றுமொரு விமானந்தாங்கி கப்பலான 'இன்டிபென்டன்ற்' ஏற்கனவே பாரசீக வளைகுடாவில் நிலை கொண்டிருப்பது தெரிந்ததே.

விவசாயஅமைச்சு கட்டிடத்தினுள் ஐ.நா. அதிகாரிகளை அனுமதிக்க ஈராக் அரசு எடுத்த முடிவை தந்திரமான பின் வாங்குதல் என்றுஜோர்ஜ்புஷ் வர்ணித்துள்ள அதேவேளை ஈராக்கிற்கு கிடைத்த வெற்றி பாக்தாத்தில் மக்கள் கொண்டாடுவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

ஐ நா. கண்காணிப்பு அதிகாரிகள் குழுவில் இடம்பெற்றிருந்த இரண்டு அமெரிக்கர்கள் தற்போது நீக்கப்பட்டுள்ளனர்.

கட்டுமாணப்பணி நிறுத்தப்பட்டதும் பதற்றம் தணிந்து விட்டதாகக் குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் பேசுகையில் அயோத்தி விவகாரத் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று சமயத் தலைவர்களிடம் தாம் தெளிவாக எடுத்துக் கூறியிருப்பதாகத் தெரிவித்தார்.

## புதிய யூத குடியேற்றங்கள்; நிறுத்த இஸ்ரேல் அரசு முடிவு

(ஜெருசலேம்)

கைப்பற்றப்பட்ட அரபுப் பிரதேசங்களில் புதிய யூதக் குடியேற்றங்களை நிறுத்த இஸ்ரேலின் புதிய அரசாங்கம் முன்வந்துள்ளது.

கைப்பற்றப்பட்ட மேற்குக் கரையோரப் பகுதியிலும் காஸா தொடுவாயிலும் இஸ்ரேலியருக்கு 6,600 புதிய இல்லங்கள் அமைக்கப்பட மாட்டாதென வீடமைப்புத் துறை அமைச்சர் பென்யாமின் பென் எலைஸர் கூறினார்.

இதேவேளை எல்லைப் பிரதேசங்களில் யூதர்களுக்கென 8,000 வீடுகள் அமைக்கப்படுகின்றன. இந்தநிர்மாணப்பணிகளை நிறுத்த அரசாங்கம் தீர்மானிக்கலாம் என இஸ்ரேல் தொலைக்காட்சி அறிவித்தது.

இஸ்ரேலிலும் எல்லைப் பகுதியிலும் அமைக்கப்படவுள்ள ஆயிரக்கணக்கான வீடுகளை நிர்மாணிக்காமல் ரத்துச் செய்ய அடுத்த வாரமளவில் கூட்டமொன்று இடம்பெறலாமெனவும் அத்தொலைக்காட்சி மேலும் அறிவித்தது.

கடந்த மாதம் நடைபெற்ற பொதுத்தேர்தலில் வெற்றியீட்டிய பிரதமர் யிடஷாக் ராபின், அரபு இஸ்ரேல் சமாதானப் பேச்சுக்களில் ஒருதிருப்பத்தை ஏற்படுத்தி வருகிறார்.

## ஐ. நா. வின் காவல் கோரும் போதைப்பொருள்குற்றவாளி

(கொலம்பியா)

உலகில் மிக அபாயகரமான போதைப் பொருள் குற்றவாளியான எஸ்தோபர்சிறையிலிருந்து தப்பிச் சென்ற பின் கொலம்பிய அரசாங்கத்திற்கு செய்தியொன்றை அனுப்பியுள்ளார்.

ஒலிப்பதிவு நாடாவில் பதிவு செய்யப்பட்ட இச்செய்தியில் ஐ நா. படை காவல் செய்யுமானால் சிறைக்குத் திரும்பிச் செல்லத் தான் தயாராக இருப்பதாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இவர் சிறையிலிருந்து ஒன்பது உதவியாளர்களுடன் தப்பிச் சென்றிருந்தார் இவரைச் சிறையிலிருந்து இராணுவத் தளமொன்றிற்கு இடமாற்றம் செய்தபோது கலகம் ஒன்றை நடத்தி அவர் அங்கிருநது தப்பிச் சென்றிருந்தார்.

## அரபு - இஸ்ரேல் பேச்சுக்கள் வாஷிங்டனில் நடைபெறும்?

(ஜெருசலேம்)

அடுத்த அரபு - இஸ்ரேலிய சமாதான பேச்சு வார்த்தை பெரும்பாலும் வாஷிங்டனில் ஆரம்பமாகுமென இஸ்ரேலிய வானொலி செய்தியில் அறிவிக்கப்பட்டுள்ளது.

ரோமில் பேச்சுவார்த்தையை நடத்துவதை விட வாஷிங்டனே இதற்கு சிறந்த இடமென கருதப்படுவதாகவும் அச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் ஜேம்ஸ் பேக்கரின் மத்திய கிழக்கு விஜயத்தினைத் தொடர்ந்தே புதிய சமாதான முயற்சிகள் ஆரம்பமாகவுள்ளன இஸ்ரேலின் பதவிக்கு வந்துள்ள தொழிற் கட்சி பிரதமர் ரொபினுடனும் ஏனைய அரபுத் தலைவர்களுடனும் ஜேம்ஸ் பேக்கர் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார்.

## மற்றுமோர் உயிர்கொல்லி நோய் கண்டுபிடிப்பு

- எயிட்ஸ் ஆய்வாளர் கருத்து

அமெரிக்காவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள எயிட்ஸ்போன்ற இன்னுமோர் புதிய நோய் பற்றி அமஸ்டர்டாமில் நடைபெற்று வரும் எயிட்ஸ் ஆய்வு மாநாட்டில் முக்கியமாக ஆராயப்பட்டது. உலகின் முக்கிய எயிட்ஸ் நோய் ஆய்வாளர்கள் இதுபற்றி கடந்த வாரம் முழுவதும் ஆராய்ந்தனர்.

எயிட்ஸ் நோய் பரப்பும் எச். ஐ வி. கிருமி (ஹியுமன் இமியுனோடிபிலின்ஸிவைரஸ்) அறவே அற்ற புதிய நோய் எயிட்ஸுக்கு சமானமாக இருப்பதாக கூறப்படுகிறது. ஆய்வாளர்களுக்கு இப்புதியநோய் ஒரு கேள்விக்குறியாகவே அமைந்துள்ளது.

66 வயதுப் பெண்மணியொருவர் எயிட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டிருப்பதாகச் சந்தேகிக்கப்பட்டு அவர் பரிசோதனைக்குட்படுத்தப்பட்ட போது எச் ஐ.வி. கிருமி அவர் உடலில் காணப்படவில்லை. பதிலாக முன்னெப்போதும் கண்டுபிடிக்கப்படாத புதிய கிருமி அவர் உடலில் காணப்பட்டதாக கலிபோர்னியா பல்கலைக்கழக கிருமி கண்டுபிடிப்புததுறை நிபுணர் டாக்டர் சுதிர்குப்தாதெரிவித்தார்.

இப்புதிய கிருமிக்கு எச். ஐ. சி. ஆர். வி என (இன்டரசிஸ்டனல் டெற்றோ வைரஸ் என பெயரிடப்பட்டிருப்பதாக அவர் கூறினார்.

உலக சுகாதார நிறுவன எய்ட்ஸ் திட்டப் பிரிவின் இயக்குனர் டாக்டர் மைக்கல் மேர்சன் தெரிவிக்கையில் இப் புதிய நோய் பற்றி உலகம் முழுவதையும் உள்ளடக்கிய விரிவான ஆய்வொன்று நடாத்தப்பட வேண்டுமெனவும் இது ஒரு அவசர நடவடிக்கையாக அமையவேண்டுமென வும் தெரிவித்தார்.

இதேபோல அமெரிக்காவில் இகற்க முன்னர் சுமார் 24 பேர் தரையில் இப்புதிய நோயினால் பாதிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டும் அது குறித்து தகவல் எதுவும் வெளியிட அமெரிக்க சுகாதார அதிகாரிகள் தவறிவிட்டனர் எனக் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

ஈழநாதம்

# கட்டுப்பாட்டு விலைக்கு பொருள்கள் விநியோகம்

(குருநகர்)

கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்பட்டதை தொடர்ந்து நேற்று யாழ்.நகரப்பகுதிகளில் மண்ணெண்ணெய், தேங்காய் எண்ணெய் போன்றன விற்பனை செய்யப்பட்டதை அவதானிக்க முடிந்தது.

கட்டுப்பாட்டு விலைக்கு விற்கப்பட்ட இவ் எண்ணெய்களை வாங்குவதில் மக்கள் பெரும் ஆர்வம் காட்டினர். (21)

## செய்தியாளர் கலந்துரையாடல்

எமது ஈழநாதம் பத்திரிகையின் செய்தியாளராக பணிபுரியும் அனைத்து பிரதேச செய்தியாளர்களும் நாளை (30-7-92) காலை 11.00 மணிக்கு எமது பணிமனையில் நடைபெறும் செய்தியாளர் கலந்துரையாடலில் தவறாது சமுகமளிக்கும் படி கேட்டுக் கொள்ளப் படுகின்றீர்கள்.

-பிரதம ஆசிரியர்.

## மாவீரர் நினைவுநாள்

(யாழ்ப்பாணம்)

ஆடி மாதத்தில் வீரச்சாவடைந்த மாவீரர் நினைவு நாள் கூட்டம் (யாழ் வட்டம்) யாழ் வீதியில் அமைந்துள்ள யாழ் வட்ட செயலக முன்றலில் இன்று மாலை 7 மணிக்கு நடைபெறவுள்ளது.

அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

புலிகளுடன் பேசுமாறு கோரிக்கை

# முஸ்லிம் காங்கிரசிற்கு குழப்பம் ஏற்படுகிறதாம்

(கொழும்பு)

புலிகளுடன் சிறிலங்கா அரசாங்கம் பேசவேண்டும் என்று ரெலோ குழுவினர் கோரிக்கை விடுத்திருப்பது சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வட்டாரங்களில் குழப்பத்தை ஏற்படுத்தியிருப்பு தாகவும், இதனால் தமிழ்-முஸ்லிம் உறவுகளில் பாதிப்பு ஏற்படலாம் என்றும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம். எச். எம். அஷ்ரப் கூறியுள்ளார்.

அண்மையில் ரெலோஅமைப்பைச் சேர்ந்த சிறிகாந்தா என்பவர் அரசாங்கம் புலிகளோடு பேச வேண்டும் என்று பத்திரிகை அறிக்கை ஒன்றில் விடுத்த வேண்டுகோளுக்கு பதிலளிக்கும் வகையிலேயே அஷ்ரப் பத்திரிகை அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

அவ் அறிக்கையில் மேலும் ரெலோவின் கோரிக்கை குறித்து புரிந்து கொள்ளப்பட முடியவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்

## மேற்பார்வையாளருக்கு நாளை கூட்டம் நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

நடைபெற இருக்கும் க. பொ.த (உயர்தர) பரீட்சையின் மேற்பார்வையாளர்களுக்கான கூட்டம் நாளை காலை யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும் என யாழ் கல்விப்பணிப்பாளர் இரா.சுந்தரலிங்கம் தெரிவித்துள்ளார்.

மேற்படி கூட்டம் நாளை மறுதினம் நடைபெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டது தெரிந்ததே. (பா,05)

## ஆங்கில ஆசிரியர் போட்டிப் பரீட்சை

[யாழ்ப்பாணம்]

ஆங்கில ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சை திட்டமிட்டபடி அடுத்த மாதம் 26ஆம் திகதி நடைபெறும்.

## புதிய

தேவைக்கு மிகப் பொருத்தமான ரக விமானங்களையே நாம் தெரிவு செய்வோம் என அவ் வட்டாரங்கள் மேலும் குறிப்பிட்டன.

இதேவேளை வை-8 விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதை தொடர்ந்து வட பகுதியில் மேற்கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கைகளுக்கு தேவையான எரிபொருள், ஆயுதங்கள் என்பவற்றை எடுத்துச் செல்வதில் பெரும் சிரமம் ஏற்பட்டுள்ளது என இராணுவ வட்டாரங்களில் பகிரங்கமாகா பேசப்பட்டு வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

முக்கியமாக சரக்கு விமானம் இல்லாவிட்டால் தாக்குதல்களுக்குத் தேவையான பொருள்களை எடுத்துச் செல்வது முடியாத காரியம் என விமானப்படையினர் தெரிவித்துள்ளனர். இதற்கென சி-130 ரக விமானங்களை வாங்க வேண்டுமென படையினர் வற்புறுத்தி வருகின்றனர்.

## 400 ஜே. வி. பி.

ஊடுருவும் தந்திரத்தை இப்போது ஜே வி.பி கையாண்டு வருவதாகஅதேதரப்புச்செய்திகள் தெரிவிக்கின்றன.

1984—1986 காலப்பகுதியில் ஜே.வி.பி கையாண்ட தந்திரோபாயத்தைப் போன்று இப்போதையதணிந்துபோகும் ஓர் தந்திரோபாயத்தைக் கையாள்கிறது.

ஜே.வி பி இராணுவரீதியாக அழிக்கப்பட்டபோதிலும், அது அரசியல் சக்தியாக இன்றும் விளங்குகின்றதுஎன்று ஜே.வி. பி பற்றிய நூல் ஒன்றை எழுதிய பத்திரிகையாளர் றோகன்

# ஒலிம்பிக் போட்டிகள் - 1992

பார்ஸிலோனவில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் 25 ஆவது ஒலிம்பிக் விளையாட்டுப்போட்டிகளில் 23போட்டிகளுக்கான இறுதி முடிவுகள் வெளியாகியுள்ளன. இவற்றின்படி பதக்கங்களைப் பெற்றுக் கொண்ட நாடுகளின் விபரம் வருமாறு

| | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
|---|---|---|---|
| சுதந்திர குடியரசின் பொதுநல அமைப்பு | 06 | 02 | — |
| சீனா | 05 | 06 | 01 |
| அமெரிக்கா | 03 | 02 | 05 |
| ஹங்கேரி | 02 | 01 | 01 |
| தென்கொரியா | 02 | — | — |
| ஜேர்மனி | 01 | 01 | 01 |
| யப்பான் | 01 | 01 | 01 |
| பல்கேரியா | 01 | 01 | — |
| அவுஸ்ரேலியா | 01 | — | 01 |
| ஸ்பெயின் | 01 | — | — |
| பிரான்ஸ் | — | 02 | 03 |
| சுவீடன் | — | 02 | 03 |
| இத்தாலி | — | 01 | 02 |
| போலந்து | — | 01 | — |
| ருமேனியா | — | — | 02 |
| பெரு | — | 01 | — |

நெதர்லாந்து, பின்லாந்து, மங்கோலியா, சுவிற்சலாந்து தலா ஒரு வெண்கலம்


## முக்கிய அறிவித்தல்

ஆனைக்கோட்டை ஸ்ரீமூத்த நயினார் கோயில் தேர்த்திருத்த வேலைகளுக்கு நிதி சேர்க்கும் அதிகாரம் எந்த ஒரு குழுவுக்கோ தனி நபருக்கோ தர்ம கர்த்தா சபை அதிகாரம் அளிக்கவில்லை என்பதை தர்மகர்த்தா சபையின் சார்பில் அறியத் தருகின்றோம்.

- இணைமுகாமையாளர்

(2911)


## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



வீரஜனனம் 21 – 06 – 1974

வீரச்சாவு 27 – 07 – 1991

### வீரவேங்கை - காண்டீபனி

[வேலாயுதம் – சுகந்தினி]

திதி: 13. 08. 1992

வதைக்கின்ற எதிரியை
மிதிக்கின்ற உணர்வோடு
உன் சுகம் மறந்தாய்
அதுமட்டுமா?
உன் உறவும் மறந்தாய்
நினைக்கின்ற போதெல்லாம்
நெஞ்சம் நின் சாதனை கண்டு வியக்கின்றதம்மா.

27-07-91இல் கட்டைக்காட்டுப் பகுதியில் இவருடன் வீரமரணம் அடைந்த ஏனைய போராளிகளுக்கும் வீரவணக்கம்.

## 31-ம் நாள் நினைவஞ்சலி



தாயின் மடியில் 13 - 01 - 1966

தாயக விடிவில் 29 - 06 - 1992

### மேஜர் அழகன்


(செல்வராசா இளங்கோ)

தேசிய விடுதலைப் போராட்டத்தில்
உனது பங்களிப்பு எத்தகையதோ
அத்தகையதே வெளிக்கொணரப் படாதிருக்கும்
உனது சமூகப் பணிகள் பற்றிய செய்திகள்.

எமது நிலையத்திற்கு
நீ ஆற்றிய பணிகள்
வரிசைப்படுத்த முடியாதவை!
எங்கள் நிலையத்தின் வரலாற்றில்
மறக்கப்படமுடியாதவை.

சிவரஞ்சனி வீதி, - நாயன்மார்கட்டு

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



★ ★ ★ ★

வீரவணக்கம்.
ஆண்டு நிறைவு கிரியைகள் 13.8.92இல் கண்டாவளையில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உன் பிரிவால் வாடும்
கண்டாவளை (2914) குடும்பத்தினர்.

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



★ ★

## லெப்டினன்ட் உமாசங்கர்

(சின்னமணி காஞ்சியஸ்)

வீரஜனனம் 27 – 08 – 1973
வீரச்சாவு 27 – 07 – 1991

குருநகர் என்ற எரிமலையானவன்
எங்கள் லெப். உமாசங்கர்
சருகென எதிரியை சாக்களம் போக்கியே
சாய்ந்தனன் நெஞ்செலாம் நிறைந்தனன் - அவன்
கொட்டிய குருதிச் சாற்றினில் இம்மண்
கொதித்தது; குளித்தது; குளிப்பால் விழித்தது
எட்டி நடந்திட எழுந்திடுவீர் - இவன்
இலட்சியப் பயணம் தொடர்ந்திடுவோம்!

8/3 லெப். உமாசங்கர் வீதி,
குருநகர்
யாழ்ப்பாணம்.


குடும்பத்தினர்
உற்றார், உறவினர்
(சி/4767)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 29 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது.

நாயன்மார்கட்டு, சனசமூக நிலையம்.
யாழ்ப்பாணம்.
(சி- 4791)

## 31-ம் நாள் நினைவஞ்சலி

வீரமலர்வு 12 | 12 | 1969



வீரச்சாவு 29 | 06 | 1992

## வீரவேங்கை சேரன்

(சிவஞானம் – அன்ரனி சில்ஸ்)
கட்டைக்காடு - முள்ளியான்

வண்ணக்கனவுகள் வளரும் வயதினிலே
வாசலைத்திறந்து பாசறை சென்ற வீரனே
அன்னை மண்ணை மீட்கும் பணியில்
அண்ணணின் வழியினிலே சேரனாய்
கட்டைக்காட்டினிலே பிறந்து தவழ்ந்து
தன் சொந்த மண்ணிலேயே
தன் குருதியால் மண்ணை முத்தமிட்டவனே
கட்டைக்காடு தனிலே கயவன் அதிர்ந்திட
கன்னத்திலே குண்டேந்திய மாவீரனே
தாயை மறந்து தனியே விட்டு மண்ணில்
சரிந்து மலைபோல் சாய்ந்து விதையானாயோ?

இதே மோதலில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட போராளிகளை நினைவு கூருகின்றோம்.

உன்பிரிவால் வாடும்
[2915] தாய், சகோதரி.

திய பத்திரிகையாளர் றோகன் குணரெட்னா அண்மையில் தெரிவித்துள்ளார்.

1987 இல் இந்திய இராணுவம் நாட்டை ஆக்கிரமித்தது முதல் ஜே.வி.பி அதன் அரசியல் கோட்பாட்டை மாற்றிக் கொண்டுள்ளது. மாக்ஸிசம்-லெனினிசத்துவ நாடு, தேசியம் என்ற போக்கில் ஜே வி.பி அதன் சிந்தனையைத் திருப்பியுள்ளது அத்துடன்ஜே வி.பி இப்போது அதன் இந்திய எதிர்ப்புக் கொள்கையையும் கைவிட்டுள்ளதாம்.

### 5ஆம் ஆண்டு

வித்திணைக்களம் மேற்கொண்டிருக்கிறது.கொழும்பில் இருந்து யாழ். திரும்பிய யாழ். கல்விப்பணிப்பாளர் மேற்படி தகவலைத் தெரிவித்தார்.

### கப்பற்

மேற்படி போக்குவரத்து கப்பல் சேவைமூலம் திருக்கோணமலைதுறைமுகத்தில் சென்று இறங்கும் பயணிகள் ஹபரணை வரையும் பாதுகாப்புடன் பயணம் செய்வதற்கு சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் உத்தரவாதம் அளிக்கும்எனக்கூறப்படுகிறது

கொழும்பு சென்றிருந்த யாழ் அரசாங்க அதிபர் மேற்படி கப்பல் சேவை தொடர்பாகஅத்தியாவசிய சேவைகள் பகுதியின் அதிகாரிகளுடன் நடாத்திய பேச்சுக்களைத் தொடர்ந்து மேற்படி நடவடிக்கைஎடுக்கப்பட்டிருக்கிறது

எனினும் இக்கப்பல் சேவையை அத்தியாவசிய சேவைகள் பகுதியினர் பொறுப்பேற்று நடாத்துவதா அல்லது ''மேர்க்கண்டைல்'' சிப்லைன்'' எனப்படும் தனியார் கப்பல் கம்பனி நடத்துவதா என்பது பற்றி இதுவரைதீர்மானிக்கப்படவில்லை இவ்விடயம் தொடர்பாகவே தற்போது ஆலோசிக்கப்பட்டு வருகிறது. (க) (பா)

## லெப். கர்ணன்

(நவரத்தினம் வெஸ்லி தவேந்திரன்)
(ஹாட்லிக் கல்லூரி மாணவ முதல்வன்)

பெற்ற அன்னை மடியில் 24-11-1971
பிறந்த நாட்டின் விடிவில் 29-07-1991

பிறந்த மண்ணை பிறராளப் பொறாது
பொங்கி யெழுந்து போர்க்களம் சென்றாய்
உறவுகள் மறந்தாய்; உயிருடல் எல்லாம்
அன்னை மண்ணுக்கே அளித்தனை வாழி!
கட்டைக் காட்டில் கடும்பகை ஓட்ட நீ
கொட்டிய குருதியில் கொள்கைப் பயிர்வளரும்
பெற்றவர் உன்னுடன் பிறந்தவர் உன்றன்
வெற்றியை நினைந்து நிமிர்ந்து நின்றோம்
ஐயாவுன் தற்கொடை உலகில்
பெய்யும் மழையென வாழ்க பெரிதே!

உன்னை நினையும்

''சத்திய புரி'',
முதலாம் கட்டை,
பருத்தித்துறை. (2976)

குடும்பத்தினர்.
நண்பர்கள்.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

28- 07- 1992

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 5042

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கங்கள்:-
22-7003, 27-3946, 42-0488, 24-6855, 28-9186, 24-8429, 42-3267, 28-0657, 27-6583, 24-9968, 42-1464, 28-3171, 24-1056, 28-6996, 27-1292, 26-3638, 26-3321, 24-9390, 42-3419, 28-4255, 36-6706, 36-1150, 22-4710, 36-411, 25-3674, 22-7011, 71-2047, 70-8938.

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்தவாகன இலக்கங்கள்:-
26-8382, 28-8054, 42-3514, 41-9579, 27-2016, 40-3089, 25-8935, 37-914, 25-2805, 25-5771.